
# அந்த முழு நிலாக்காலம்

கவிதைத் தொகுப்பு



தி. சுதாகர்

11
ாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த முழு நிலாக்காலம்

கவிதைத் தொகுப்பு

தீ. சுதாகர்
(மாணவன்- கொழும்புப் பல்கலைக்கழகம்)

வெளியீடு
**வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : அந்த ஏழு நிமிடங்களும்

வகை : கவிதை

நூல் அளவு : 4.75" x 6.75"

பக்கங்கள் : 100

வெளியீடு : வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்.

முதற்பதிப்பு : மார்கழி 2004

பதிப்பாசிரியர் : தி. சுதாகர்
117/1, மில் வீதி,
உக்குளாங்குளம்,
வவுனியா.

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

அச்சமைப்பு : யுனி ஆர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
48B, புளூமெண்டால் வீதி,
கொழும்பு 13.
தொலைபேசி : 2330195

விலை : ரூபா. 120

ISBN 955-98993-0-9






இந்நூல் .....

என்

பெற்றோரின் வியர்வைத்

துளிகளுக்கும்...

கல்லூரி ஆசிரியர்களின்

வழிகாட்டலுக்கும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | |
|---|---|
| அணிந்துரை | vii |
| வெளியீட்டுரை | xiv |
| ஆசியுரை | xvi |
| என்னுரை | xviii |
| | |
| கவிதை | 1 |
| இளமையும், நானும் | 4 |
| எண்ணங்கள் | 7 |
| புதுமை | 9 |
| இயற்கை | 11 |
| ஆசை | 13 |
| எண்ணத்தின் சிதைவு | 15 |
| விடியல் | 16 |
| வெளிச்சம் | 19 |
| என்ன மனித வாழ்வு இது...! | 21 |
| அது ஒரு காலம் | 24 |
| வெற்றி நிச்சயம் | 26 |
| நண்பனே | 28 |
| மீண்டும் தென்றல் | 30 |
| இரவை | 31 |
| ஏழை இயலாமை | 32 |
| புதிய மாற்றங்கள் | 33 |


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமை 35

அந்தக் கொடுமானம் 38

ஓ அமெரிக்காவே...! 39

அந்த முழு நிலாக்காலம் 41

ஏ! மனிதா சிந்தி 45

ஏன் இந்த கண்ணீர்த்துளி 46

கனியவில்லை 47

வாழ்வின் தத்துவம் 50

உனக்காக ஏங்கிய நாட்கள் 53

கைகோர்ப்போம் வாராயோ 55

தேநீர்க்கடையில் இரண்டு தேனீர்க் கோப்பைகள்...! 57

உயிர்கள் மட்டுமல்ல உணர்வுகளும் தான்...! 58

வாழ்வுச்சுழி 59

கசங்கிய மனம் 61

காலம் மாறிப்போச்சு 62

ஒரு நாள் உணர்வாய் 63

கருணை 64

நண்பனுக்கு சிலவரிகள் 65

விழித்திரு 67

உணர்வலை 68

கோலங்கள் 70

செவ்விளனி 71

சாரலின் வேதனை 73




# அணிந்துரை

பேராசிரியர் கா. சிவத்தம்பி

"(கவிதை)" கவிதை எழுதுபவரும் கவிஞராக இருப்பதும் - புதுக்கவிதை எழுதும் இளம் எழுத்தாளர்கள் பலர் எதிர் நோக்கும் ஒரு பிரச்சினைபற்றிய ஒரு சிறு குறிப்பு.

இத்தொகுப்பின் ஆசிரியர் சுதாகர் என்னுடைய மாணவரது மாணவர். தனது கவிதைத் தொகுதிக்கு ஒரு முன்னுரை குறிப்பு வேண்டுமென கேட்டது நிறைந்த மனத்திருப்தியைத் தருகின்றது. எனக்கென்றொரு பரம்பரையினைப் பற்றிப் பேச முடியுமானால் அதில் சுதாகருக்கும் இடமுண்டு.

தகப்பனாக இருப்பதிலும் பார்க்கத் தாத்தாவாக இருப்பது சிரமமான காரியம். தகப்பன் பிள்ளைகளை கண்டிக்கலாம். சிலவேளைகளில் அடியும் போடலாம். ஆனால் தாத்தாமார் அதனை செய்யவே முடியாது. பேரப்பிள்ளைகள் தாத்தாவினை தாஜா பண்ணுவதிலும் பார்க்க தாத்தாக்கள் தான் பேரப்பிள்ளைகளைத் தாஜா பண்ணுவது கூட. ஏனெனில் பேரப்பிள்ளைக்குத் தாத்தா வேண்டும் என்பதிலும் பார்க்க தாத்தாவிற்கு பேரப்பிள்ளைகள் வேண்டும்.

எனக்கும் இந்த முன்னுரைக் குறிப்பினை மேலே சொன்ன தாத்தா நிலையில் இருந்தே எழுத விருப்பம். ஆனால் கடமை என்று ஒன்று உண்டு தானே.

சுதாகரைக் கொண்டே அவருடைய கவிதைகளை வாசிப்பித்தேன். கவிஞன் தான் எழுதிய கவிதைகளைத் தானே வாசிக்கும் பொழுதுதான் அவருக்கு ஒரு திருப்தி ஏற்படும். அதிலும் மேலாக கவிதைக்குள்ளே உள்ள கவித்துவம் முனைப்புடன் வெளிவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுக்கவிதை எழுதுவதற்கும் மரபு வழிக்கவிதை எழுதுவதற்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. தமிழில் மரபுக்கவிதை எழுதுவதற்கு ஒரு அடிப்படையாக யாப்புப் பயிற்சியும் வேண்டும். யாப்பருங்கலக்காரிகை போன்ற ஒரு யாப்பு நூலினை வாசிக்கும் போது அதற்குள் வரும். சுட்டப்பெறும் விதிகளுள் எந்த முறையில் எழுதப்படுவதையும் செய்யுளாக வியாக்கியானித்துவிடலாம். என்றாலும் மரபுவழிச் செய்யுளை எழுதுவதற்கு குறைந்தபட்சம் சில யாப்பு வடிவங்களிற்கான தளைமுதல்தொடைப் பண்புகள் தெரிந்திருக்கப்பட வேண்டும்.

புதுக்கவிதையினை எழுதுவதற்கு இந்த ஓசைலய விதிமுறையில்லை. உண்மையில் புதுக்கவிதை என்பது செவியை நம்பி இருப்பதில்லை. கண்ணை நம்பி இருப்பது. கண்ணின் விரிக்கும் வாசிப்பு அலைவிற்கும் ஒரு தொடர்புண்டு. நான் இதைப்பற்றி ஏற்கனவே விரிவாக எழுதியுள்ளேன். நுஃமான், வல்லிக் கண்ணன் புதுக்கவிதை பற்றிய தமது நூலில் மேற்கோள் காட்டி விவாதித்துள்ளனர்.

உண்மையில் மரபுவழிக்கவிதை எழுதுவதிலும் பார்க்க புதுக் கவிதை எழுதுவது சிரமமானது. புதுக் கவிதையின் சொற்சேர்க்கைகள் சொல்லடுக்குகள் வரிப் பிரிப்புகள் ஆகியன சந்தங்களுக்கு அப்பால் நிற்கும் அந்த உயிர்ப்புத்துடிப்பாகும். புதுக்கவிதை நெஞ்சில் கருதிப்போடு சேர்வது. சிந்தனையின் வயத்தோடு சம்பந்தப்பட்டது. இதை ஏற்படுத்துவதற்கு புதுக்கவிதை படிமங்களைப் பயன்படுத்தும். படிமம் என்பது உவமைக்கு மேலே உள்ள உருவகத்துக்கு மேலே வரும் ஒரு வகை மனப்பதிவு. பாரதியாரின் "காற்று" எனும் கவிதையில் வரும் வரிகள் இந்த உண்மையினை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

சாதுரியமான சொல் மாற்று வீச்சின் மூலம் புதுக்கவிதையினை படைக்க விரும்பும் பல கவிஞர்கள் இருக்கின்றனர். ஆனால் சொல் ஜாலத்திலும் பார்க்க உணர்வினைப் பதிவு செய்யப்பட வேண்டும். அதுதான் புதுக்கவிதையின் தளம்.



இப்படி பார்க்கிற பொழுது சிரேஷ்டர்களாக கருதப்படும் கவிஞர்கள் பலர் கூட நேர்மையான ஒரு தெரிவின்போது அதிகம் தேறமாட்டார்கள்.

புதுக்கவிதையின் உயிர் அந்த கவிஞரது உணர்வின் ஆழத்தில் தங்கியுள்ளது. உணர்ச்சியிலும் பார்க்க உணர்வு முக்கியம். உணர்வு எப்பொழுதுமே உண்மைத் தன்மையானது. அதற்கு போலித்தன்மை இருக்காது. ஒரு Genuineness (உண்மை, நேர்மைத்தன்மை) உண்டு.

இந்த உணர்வினதும் அது பற்றிய அனுபவத்தினதும் உண்மைக்குள்ளும், நேர்மைக்குள்ளும் தான் இது தோய்ந்து கிடக்கின்றது. உண்மையான புதுக் கவிதையில் அது பட்டுத் தெறிக்கும். இதனாலே தான் ஈழத்துக் கவிஞர்களது புதுக்கவிதைகள் பல காலத் தமிழ் இலக்கியத்தில் மதிப்புமிக்க தோற்றங்களில் விழாப்புகழ்மிக்க கவிஞர்களைக்கூட தூக்கி எறிந்து விடும் அளவிற்கு அனுபவ ஆழமும் உணர்வு நேர்மையும் வெளிப்படுத்துந்திறனும் கொண்ட பல இளம் கவிஞர்கள் போர்க்களங்களிலிருந்து இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளனர். நான் கூறி வருகின்ற ஒவ்வொன்றிற்கும் உதாரணம் சொல்லி விளக்க வேண்டும் என்ற ஆவல் எனக்கு நிறைய உண்டு. அத்தகைய ஒரு பதிவுக்கான வசதியற்ற சூழலில் இந்த முன்னுரை குறிப்பு எழுதப்படுவதால் சொல்லிய மேற்கோள்களை காட்ட முடியவில்லை. ஆனால் இவற்றை வாசிக்கும் ஈடுபாட்டு நேர்மையும் அனுபவப்பின்புலமும் கொண்ட வாசகர்களுக்குப் பல நல்ல வரிகள் அலையலையாக போல வந்து மோதும். காதால் கேட்கும் நெஞ்சைக் குடைக்கும்.

புதுக்கவிதையின் பிரதான இயல்பு என்னவென்றால் அது ஒரு ஜனநாயக வடிவம். முதுகலை படித்து 'ரிஷிகன்' வகுப்பிற்கு போய் புதுக் கவிஞராவதில்லை. யாரும் எழுதலாம் யாவரும் எழுத வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடத்திலேதான் பிரச்சினை ஆரம்பமாகின்றது. புதுக்கவிதை எந்தக் கட்டத்தில் வசன கவிதையின் இருந்து வேறுபடுகின்றது.

வேத உச்சாடனங்களை உள்வாங்கி அந்த உச்சாடனங்களின் கருத்துத் தளத்தில் நின்று கொண்டு தமிழின் சந்த மரபுகளுக்கு அப்பாலே நின்று புதிய உலகிற்கான ஒரு உபாத்தமாக பாரதி "காற்றே வா..." என்று தொடங்கும் தனது கவிதைகளை எழுதினான். பாரதியின் பதிப்பாசிரியர்களே குறிப்பாக 1930களில் மணிக்கொடி மூலமாக பிரபலப்படுத்தப்பட்ட கவித்துவப்பரிசோதனைகளுக்கு பிச்சமூர்த்தி, கு.ப.ரா போன்றோர் எழுதிய புதிய வகை கவிதைகளுக்கு லேபலாக(Label) அமைந்த வசனக் கவிதை என்ற சொல் பிரபலம் பெற தொடங்கிற்று. பாரதியே அந்த சொற்றொடரை பயன்படுத்தினான் என்ற மயக்கம் ஏற்படத்தக்க வகையில் "கண்ணன் பாட்டு", "தேச பக்தி பாடல்கள்" போன்ற ஒரு பாடல் வகையாக வசன கவிதையினையும் பாரதி பதிப்புகளுக்குள்ளேயே புகுத்த தொடங்கினர்.

வசன கவிதை என்ற இந்தச் சொற்றொடரை மாத்திரமல்லாது அதற்குப் பின்புலமாக எடுத்துக் கூறப்பட்ட கவிதைக்கோட்பாட்டினை கூட அக்காலத்தில் ரகுநாதன் போன்றோர் மிக வன்மையாக கண்டித்தனர்.

கவிதை வெளிப்பாட்டில் ஏற்பட்ட இந்த மாற்றம் உண்மையில் தமிழில் நவீன மயப்பாட்டிற்குள் மாத்திரம் அல்லாமல் தமிழ்மக்கள்; தமிழ்மக்களின் மேனாட்டு மயப்பாட்டினாலும் அதன் வழியாக வந்த உலக மயப்பாட்டினாலும் தவிர்க்க முடியாதபடி ஏற்படுவது என்ற நிலைப்பாடு 50களிலேயே உணரப்பட்டது. 50களின் இறுதி 60களின் முற்கூற்றிலே தான் புதுக்கவிதை என்ற சொற்றொடர் ஸ்தாபிதமாயிற்று. ஒரு நிலையில் இது அக்காலத்திலே வெறும் வழக்காகவிருந்த "New poetry" என்ற ஆங்கில தொடருக்கான நேர் மொழிபெயர்ப்பாக இருந்தாலும் இன்னொரு நிலையில் காலனித்துவத்தாலும் அதன் வழி வந்த மேனாட்டு மயப்பாட்டாலும் இவை காரணமாகத் தோன்றிய சுதேசிய பிரக்ஞை காரணமாகவும் நாட்டு கவித்துவ மரபில் தவிர்க்க முடியாதபடி ஏற்பட்ட



புது நிலையின் வெளிப்பாடாகவே புதுக்கவிதையும் அமைந்தது. அகவலிலிருந்து விருத்தத்திற்கு வந்து விருத்தத்திலிருந்து பன்முகப்பட்ட பாவினங்களைத்தொடர்ந்து (கட்டளைக்கலித்துறை, ஆசிரிய விருத்தம், கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், சிந்து, கண்ணிகளை) உள்வாங்கி வளர்ந்துவந்த தமிழ்க் கவித்துவ ஓசையின் இன்னொரு மாறு கட்டமாயிற்று.

இந்த புதிய கவிதை வடிவத்தினை பழையதில் இருந்து பிரித்துக் காட்டுவதற்கு "யாப்பின்" இருப்பு இன்மையையும் உரைகல்லாக கொள்ளப்பட்டது. ஒரு நிலையிலே யாப்பு என்னும் சொல் திறப்பு என்ற சொல் போன்றது. திறத்தலுக்கு பயன்படுவது திறப்பு. அது போல யாத்தலுக்கு பயன்படுவது யாப்பு. யாத்தல் என்பது Composing போன்றது.

இந்த Act of composition (செய்யுள் செய்யப்படுதலான நடவடிக்கை) ஒரு மரபு வட்டத்தினுள் நிகழ்வது. முதலில் தமிழ் மொழியின் இயல்பான ஓசைக்குரிய பாக்களில் இருந்து (அகவல், வெண்பா, கலி, வஞ்சி) இந்திய பொதுமைப்பின் ஓசை மரபிற்கு சென்று (விருத்தம்-சந்தம்) பின்னர் வரலாறு காரணமாக பிரிக்கப்பட்டுப்போன தமிழ் நாட்டின் நாட்டார் நிலை மரபினுள் மூழ்கி பாரதி காலத்தில் தமிழ் மண்வாசனையும் இந்திய முழுமையையும் இணைத்து நின்ற தமிழ்க்கவிதை ஓசைத்தளம் மேல் நாட்டு மயமாக்கல் வழியாக வந்த நவீன மயப்பாட்டினால் ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றது. இது தான் புதுக் கவிதை வரலாற்றின் சாராம்சமாகும்.

இந்த மாற்றம் ஒரு மிகப் பெரிய சமூக, கல்வி மாற்றத்தோடு இணைந்தது. 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து எழுத்தறிவென தமிழில் மொழி பெயர்க்கப்படும் லிட்டரசி (Literacy) மனித இருப்பின் அச்சாணியாக்கப்பட்டது. அதாவது எழுதப்படிக்கத் தெரிதல் எல்லோருக்கும் அத்தியாவசியமாக்கப்பட்டதிலும் பார்க்க ஓர் அடிப்படை உரிமையாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தறிவுத்தமிழ் ஒவ்வொருவரும் (ஆணும், பெண்ணும்) தமிழ்ப் பாரம்பரியத்தினைத் தமதாக்கிக் கொண்டனர். கொள்முறையான கல்வி மக்களுடைமையாக்கப்பட்டது. தமிழ் தமிழர் சகலரினதும் உடைமையாயிற்று. அதாவது அவர்கள் ஒவ்வொருவரும் தமிழை எழுதவும் வேண்டும் வாசிக்கவும் வேண்டும் "பேச்சு மாத்திரம்" ஒருவரை தமிழராக்காது என்ற நிலைமை வந்து விட்டது.

இந்த உரிமைப் பயன்படுத்துகைக்கு தமிழின் நவீன காலத்திற்கு முந்திய "யாப்பு மரபு" நந்தியாகக் கிடந்தது. வரலாற்றோட்டத்தில் கால மாறுதல்கள் ஏற்படுத்திய மாற்றத் தேவைகளுக்கு, இந்த புதிய தமிழ் உரிமையாளர்கள் அந்த வேகத்தைத் துரிதப்படுத்தினர். தமிழ் உணர்வுள்ள ஒவ்வொரு இளைஞனும் ஒவ்வொரு யுவதியும் தமது மன உணர்வுகளுக்கு இலக்கிய வடிவம் கொடுக்க விரும்பினர். தாங்கள் புலவர்களல்ல என்பது தெரியும். ஆனால் கவிஞராக இருக்க விரும்பினர். புலவர் = செய்யுள் என்ற சமன்பாடு உடைந்து கவிஞர் = கவிதை என்ற புதிய சமன்பாடு வந்தது.

எல்லோரும் பாட விரும்பினார்கள், விரும்புவார்கள். காலனித்துவ பின் காலனித்துவ கால தமிழ் அரசியல் அவலங்களை கவிஞர் ஆக்கிற்று. தமிழோடு அந்த அன்னியோன்யம் இல்லையென்றால் அதற்காக உயிரைக் கொடுக்க வருவானா? வருவாளா? தமிழ் இளைஞரின் ஒலிவாங்கியாகவும் ஒலிபரப்பாகவும் ஆயிற்று. தமிழ் இளைஞர்கள் தமது ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்த துடிக்கின்றனர். இந்த துடிப்பும் தமிழ்க் கவிதையின் வெளிப்பாட்டில் முன் எந்த காலத்திலும் இல்லாத ஒரு மிகப் பெரிய பரப்பு வெளியை தோற்றுவித்துள்ளது.

சுதாகர் தமிழ்க் கவிதை வெளிப்பாடு பற்றிய இந்த வரலாற்றின் ஒரு வெளிப்பாடு. ஓர் எடுத்துக்காட்டு.

தான் நினைப்பதைப் பாட விரும்புகின்றான். தான் பாடுவதை அவைத்துவம் வாய்ந்ததெனவே நினைக்கின்றான்.



இந்த உரிமைக் கோரிக்கையின் எந்த அளவு நியாயம் இருக்கின்றது என்பது தான் அந்த முக்கியமான வினா. தமிழை இப்படிப் பயன்படுத்த இவனுக்கு உரிமையுண்டு. இந்த இளைஞனுடைய இந்த உரிமை தமிழை எந்த அளவிற்கு வளப்படுத்த வேண்டும். இந்த தீர்மானிப்பில் இளம் கவிஞனின் ஆவேசம் முக்கியமாகாது; ஆத்ம ஆழமே முக்கியமானதாகும். ஆழ்முழுக்கல் போட்டியில் தண்ணீருக்கு மேலே அவன் வரும் பொழுது அவன் மூழ்கிய ஆழத்தின் தூரம் அந்த மேல்வருகையின் வேகத்தில் தெரியும். கவிதையும் அப்படித்தான். ஒருவன், ஒருத்தி எந்த அளவிற்கு தங்கள் மனிதத்துவத்துக்குள் எத்துணை ஆழமாகப் போகிறார்களோ அத்துணை தாக்கத்துடன் அந்தக் கவிதைகள் வெளிவரும். இது ஒரு நியதி. இந்தக் கால இளைஞர் பலரின் அனுபவ ஆழமும் அதற்கு தமிழ் வழங்கும் வடிவமும், வனப்பும் நம்மை சிலிர்க்க வைக்கின்றன.

சுதாகருக்கு தமிழ் வேறு வகையாகப் பயன்படுகின்றது. சகம் தரும் எண்ணத் தடவுதல்களில் அவலங்களும் இன்பம் தெரிகின்றது. ஆனால் அந்த நினைவு மீட்புக்களின் ஊடே நாம் பட்ட துன்பங்களின் கடுந்துயரும் இறந்து போனவற்றின் சோகங்களும் சுற்றிச் சுற்றி வருகின்றன. விடலைப் பருவத்துக் காதலும் தெரிகின்றது. விடுபட்ட சோகமும் தெரிகின்றது.

சுதாகர் தொடர்ந்தும் கவிஞனாக இருப்பது என்பது இவற்றின் ஊடே அவனை ஆகர்ஷிக்க போகும் வாழ்க்கைத்தத்துவமும் அதன் ஊடாக அமையப்போகும் மனித பிரக்ஞையுந்தான். இவற்றின் ஊடாக தமிழுக்கு வருவதற்கு முன்னர் தமிழின் ஊடாக இவர் அவற்றை எட்டிப்பிடித்தல் வேண்டும். வவுனியாவைச் சேர்ந்த பையன் ஒருவனுக்கு இதற்கான தூரம் அதிகமில்லை. உணர்வின் நேர்மை தான் முக்கியம். சுதாகருக்கு என் வாழ்த்துக்கள்.

அன்புடன்,<br>கார்த்திகேசு சிவத்தம்பி<br>தகைசார் ஓய்வுநிலைப்<br>பேராசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் (14) பதின்நான்காவது நூலாக எமது நண்பர்கள் வட்ட உறுப்பினர் திரு. தியாகராஜா சுதாகர் அவர்களின் இக்கவிதைத் தொகுப்பு நூல் வெளி வருகிறது.

வன்னியூர்க் கவிராயர் அவர்களின் கவிதைகள், சிறுகதைகள் அடங்கிய அமுத கங்கை என்ற நூலைப் பதினைந்தாவது நூலாக வெளிக்கொணர்ந்த இந்த வேளையில் இந்நூல் வெளி வருகின்றது.

நண்பர் சுதாகர், கொழும்புப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர். எமது நண்பர்கள் வட்டக் கூட்டங்களுக்கும், மாதந் தோறும் நாம் நடாத்தும் பௌர்ணமி முன்றுக் கூடல்களுக்கும் பாடசாலைக் காலத்திலிருந்தே கிரமமாக வருபவர்.

கவிதை புனைவதில் பெரும் ஆர்வம் கொண்ட இவர், அவ்வப்போது எழுதிய கவிதைகள் சிலவற்றைத் தொகுத்து நூலாக்கியுள்ளார்.

சமூக உணர்வுள்ள கவிஞனாக உருவாகி வரும் இவரின் கவிதைகள் பல செய்திகளை நுட்பமாகச் சொல்கின்றன.

தான் வாழும் சமூகத்தில் அன்றைய இவ்வுலக வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டவர் போலச் சில கவிதைகளைப் புனைந்துள்ளார்.

சமூகத்துக்கு ஒத்து வராத சில முரண்பாடுகளைக் காணும் போது சமூக உணர்வுள்ள கவிஞனுக்குக் கோபம் வருவது இயற்கை தான்.



அந்தக் கோபம் விரக்தி நிலையாக உலகுக்கு வழங்கக் கூடாது. சமூக மாற்றத்திற்கான அறைகூவலாகவும், நம்பிக்கையையும் உற்சாகத்தையும் தருவதாகவும் இருக்க வேண்டும்.

இவரது கவிதைகள் மிகவும் எளிமையான புதுக்கவிதைகள் என்பதால் எவரும் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றன.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தில் தொடர்ச்சியான பத்து ஆண்டுப் பௌர்ணமி நிகழ்வுகளின் அறுவடைகளில் ஒன்றாக வெளிவரும் இக் கவிதை நூலை எமது வெளியீடாகக் கொண்டு வருவதில் மகிழ்கிறோம்.

நண்பர் சுதாகர் கவிதைத் துறையில் இன்னும் பல படிகளைக் கடந்து முன்னேற வாழ்த்துகின்றோம்.

அன்புடன்.
தமிழ்மணி அகளங்கன்
கந்தையா ஸ்ரீகந்தவேள்

இல 90, திருநாவற்குளம்,
வவுனியா.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

நாம் வாழும் உலகத்தில் எவ்வாறு மனிதனின் உள்ளுணர்வு இருக்கின்றது என்பதை பல்வேறு கருத்துக்களுக்கூடாக அல்லாமல் ஓர் எழுத்தாளனின் (கவிஞனின்) பரிமாணங்களின் வெளிப்பாடாக எனது மாணவன் சுதாகரின் கவிதைத் தொகுப்பு வெளிவருகின்றது.

ஓர் கவிஞன் தான் உலகத்தில் எப்படியெல்லாம் இருக்கவேண்டும் என்பதை சித்தரிப்பதாக இக்கவிதைகள் காணப்படுகின்றன. தனக்கே உரித்தான எளிய சொற்களில் எல்லோரும் விளங்கக்கூடிய வகையில் எழுதியுள்ளார். பாட்டு, கவிதை, செய்யுள், புதுக்கவிதை, வசனகவிதை என பலவாறான வடிவங்களில் இவரின் இந்தப் படைப்பு இருப்புள் அடங்கும் தன்மையுடையது. இளம் துடிப்புள்ள கவிஞர், தான் சமூகத்தில் கண்ட உண்மைகளைப் படமாகக் கண்டு அடாற்ற முறையில் கவிபுனைந்து கொண்டு பணி த்துள்ளான்.

இன்று பலவகைப்பட்ட சூழலில் குறிப்பாக நவீனங்களுடன் கூடி வாழும் இளம் தலைமுறையினர் எப்படி எல்லாம் வாழவேண்டும் என்று ஆடிபாடி ஆடிக்கின்ற வேளையில் ஒருவித புதுமையாக சிந்திக்கமுனைந்துள்ள சுதாகர் பாராட்டப்பட வேண்டியவன்.

கவிஞன் என்பவன் வாழ்ந்து கொண்டிருப்பவன். அவன் தான் காணும் சமூகம் எவ்வாறு எல்லாம் வாழவேண்டும் என்பதை வெறும் கற்பனையாகக் கவிதை புனைவது என்றும் எக்காலத்திலும் ஏற்ற நடைமுறைகளை உள்ளதை உள்ளவாறே எடுத்துக்காட்டவேண்டும். எமது ஈழத்துக் கவிஞர்கள் உருத்திரமூர்த்தி, சேரன், சண்முகன், மு.தளையசிங்கம், மு.பொன்னம்பலம், சு.வில்வரெத்தினம், முருகையன் போன்றவர்கள் யதார்த்த உலகைப் படைத்தவர்கள். அந்த வகை இளம் கவிஞர் சுதாகரின் இப்படைப்பு என்றும் வாழக்கூடியவை.



எனவே தான் கவிஞன் சுதாகர் தான் படைத்த படைக்கப்போகும் கலைப்படைப்பாகிய கவிதையில் புதுமைகள் வரும். அவை இனிமேல் எமது பல்சுவைக்கனிகளாகிய பழந்தமிழ் கவிதைகளின் சாரமாகவும் வெளிவரல் வேண்டும். உள்ளத் துடிப்பை நசியவிட்டு கிடக்கும் இளம்தளிர்களின் உணர்வுகளாகவும் அமையவேண்டும். இவரின் கவிதை உள்ளத்தில் பல கீறல்கள், வெடிப்புக்கள், சிதைவுகள், தீ, காற்று, மழை, கல் போன்ற உணர்வின் வெளிப்பாடுகள் சொற்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இவையாவும் நல்ல ஆரோக்கியமான கலைப்படைப்பாக உயர்வுள்ளன. தரமான இலக்கியங்களைப் படைத்துள்ள சுதாகர் பாராட்டப்பட வேண்டியவன். மனிதநேயம் வாழ இக்கவிகள் இன்னும் வளரவேண்டும். அதற்கு இவனைப் போன்றோர் பலர் இடையே தோன்ற வேண்டும். இந்த வகையில் சுதாகரின் முயற்சி வெற்றியடைய எனது உளப்பூர்வமான மகிழ்ச்சியைத் தெரிவிப்பதுடன் என்றும் எனது நல்லாசிகள் என் மாணவன் சுதாகரிற்கு உரித்தாகட்டும்.

சி.கா. பேரம்பலம்,
அதிபர்,
விபுலாநந்தக் கல்லூரி,
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

என் உள்ளத்திலிருந்த சிந்தனைச் சிதறல்கள் ஒருங்கு சேர்க்கப்பட்ட நிலையில் முதற் கவிதைத் தொகுப்பாக இது வெளிவருகின்றது.

நான் ஒரு கவிஞனாக வரவேண்டுமென்று கனவு கண்டதுண்டு. இளமைக்கால பதிவுகள், நண்பர்கள் தந்த சிந்தனைத்துளிகள் என்பனவற்றால் உயர்தரம் படிக்கும்பொழுதே என்னுள்ளத்தில் ஒரு கிளர்ச்சி பிறந்தது.

தனிமையில் நான் எழுதிய கவிதைகள் அறிவுக்கு வித்திட்டன போலவும், எனது இளமைத் துடிப்புக்கு வழிகாட்டியன போலவும் அமைந்தமையால் பல கவிதைகளை அவ்வக் காலத்தில் என்னால் சிறப்பாக எழுத முடிந்தது. இக்காலத்தில் எனது பல கட்டுரைகள் தேசிய போட்டிகளில் வெற்றி பெற்றமை என்னைப் பெரிதும் உற்சாகப்படுத்தியது. இதுவே இக்கவிதையினை எழுதுவதற்கு உரமாய் தந்தது உண்மை.

கல்லூரிக் காலத்திலிருந்தே ஏற்பட்ட வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினருடனான தொடர்பு இதன் காரணமாக அறிந்தவர்களின் நட்பு, வழிகாட்டல் தொடர்ந்து கிடைத்தது. இது என்னை மேலும் இத்துறையில் ஈடுபட வைத்தது.

இக்கவிதைகள் எனக்கே சில வருடங்கள் கழிந்தபின் ஒரு கிறுக்கன் கிறுக்கிய கீறல்கள் போன்று தோன்றலாம். இருந்தாலும் அந்த நேரத்தில் அந்தக் கிறுக்கல்கள் அவையுக்குப் பெரிதல்லவா.

காதல் போன்ற சுலபமான பாடுபொருள்களில் இருந்து விடுபட்டு சமுதாயச் சிக்கல்களை கவிதையாக்கவேண்டுமென்பதே எனது அவா. இத் தொகுப்பில் என்னால் இதைச் சிறப்பாக செய்யமுடியாது போகலாம். ஏனெனில் இது என் முதற் தொகுப்பு. இத் தொகுப்பு உங்கள் கரங்களில் தவழ்கின்ற போது நிச்சயம் மகிழ்ச்சி கொள்வேன். இதனைத் தமிழ் உலகம் ஏற்றுக் கொள்ளுமென நினைக்கின்றேன். நான் தொடர்ந்து எழுதுவதென்பது உங்கள்



கருத்துக்களிலே தங்கியுள்ளது. பணிவுடன் உங்கள் கருத்துக்களை சிரம் தாழ்த்தி ஏற்றுக்கொள்கிறேன்.

இத்தொகுப்பை வெளியிட எண்ணியபோது எவ்வித மறுப்புமின்றி ஆதரவு நல்கிய என் அருமைப் பெற்றோருக்கு முதற்கண் நன்றி. இத்தொகுப்பினை சிறப்பிக்கும்வகையில் அணிந்துரைக் குறிப்பு வேண்டுமென கேட்டபோது தனது சுகயீனத்தையும் பாராது அணிந்துரை வழங்கிய பெருமதிப்புக்குரிய பேராசிரியர் கா. சிவத்தம்பி ஐயா அவர்களுக்கு என் நன்றிகள். மேலும் வெளியீட்டுரை வழங்கிய மதிப்புக்குரிய தமிழ்மணி அகளங்கன், கந்தையா ஸ்ரீகணேசன் ஆகியோருக்கும் மற்றும் ஆசியுரை வழங்கிய மதிப்புக்குரிய அதிபர் சி.வி. பேரம்பலம் அவர்களுக்கும் என் நன்றிகள்.

மேலும் என்னை உற்சாகப்படுத்தி அறிவுரை நல்கிய ஆசிரியர் எஸ்.சிவகுமார் (கதிர்வேல்), எஸ்.ஜெயசந்திரன் மற்றும் என் பல்கலைக்கழக நண்பர்கள், அறிவுரை தந்து வழிகாட்டிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இந்நூலை வெளியிட்ட கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்திற்கும், இந்நூலை சிறப்புற அச்சுப்பதித்த யுனி ஆர்ட்ஸ் அச்சகத்திற்கும் மற்றும் இத்தொகுப்பில் இடம்பெற்ற பல கவிதைகளை வெளியிட்ட தினமுரசு, செந்தூரம், மருதம் சஞ்சிகை, நிலக்குரல் ஆகிய ஊடகங்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

117/1 மில் வீதி,
உக்குளாங்குளம்,
வவுனியா.


தீ. சதீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

188850

# கவிதை



இனி ஒரு
கவிதை எழுத வேண்டும்
இன்றாவது எழுதி முடிக்க வேண்டும்.
ஒவ்வொரு நாளும்
முயற்சிக்கின்றேன் முடிவதில்லை.
இன்றாவது நிறைவு
செய்ய வேண்டும்.


பொது சன நூலகம்
[illegible]
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதைப் பற்றி எழுதுவது...?
இயற்கையின் எழிலைப் பற்றியா...?
மனித உறவுகளைப் பற்றியா...?
அல்லது
பெண்களைப் பற்றியா?
எதைப் பற்றி எழுதுவது?
எப்படி எழுதுவது?
இன்றுவரை எனக்குத்
தெரியவே இல்லை.
முயற்சிக்கின்றேன் முடியவில்லை.

காதலித்தால் கவிதை வருமாம்
எனக்கு நேர்ந்ததே இல்லை
அந்த விபத்து.
இயற்கையினை ரசிக்கும்
உள்ளங்களால்
கவிதை எழுத முடியுமாம்.
எனக்கு
அப்படியொரு உள்ளத்தை
இறைவன் கொடுக்கவில்லை.
எப்படி நான்
கவிதை எழுதுவது...?



அந்த வேதனையிலும்
கவிதை வருமாம்
எனக்கு வாழ்க்கையே
வேதனையாகிவிட்டது.
எனக்கு எப்படி கவிதை
வரும்...?
எப்படியோ இன்று
ஒரு கவிதை எழுத வேண்டும்.
இன்றில்லை எப்போதும்
என்றோ ஒருநாள்
நான்
ஒரு கவிதை எழுதுவேன்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையும், நானும்



தென்றல் வீசுவதும் புயல் அடிப்பதும்
ஒரு காலம் தான்.
பூ பூப்பதும் கனி கனிவதும்
ஒரு காலம் தான்
காதல் கனிவதும் இல்லறம் இனிப்பதும்
ஒரு காலம் தான்.
இளமையும் அதன் துடிப்பும்
ஒரு காலம் தான்.
அதற்குள் எவ்வளவு முடியுமோ
அவ்வளவையும்
சாதித்து விடு.



எவ்வளவு காலம் தான் - பழைய
வரலாறுகளைப் புரட்டிக்கொண்டிருப்பது..?
நீ-புதிய வரலாற்றினைப் படைத்துவிடு.
கண்ணாடி முன் நிற்கிறேன்.
என் இளமைத் தோற்றத்தினை எண்ணி...!
எவ்வளவு விரைவாக என்
இளமை பறிபோனது.
சாதிக்காமல் தொலைந்துவிட்ட
எனது இளமையினை எண்ணி
வெட்கப்படுகின்றேன்.

இருபத்தைந்தில் 'கீற்ஸும்'
இருபத்தொன்பதில் 'செல்லியும்'
உலக மகா கவிகளானதும்
வெல்வதற்குத் தேசமில்லை என
'அலெக்ஸாண்டர்' முழங்கியதும் வெறும்
இருபத்தொன்பதிற்குள்
இன்னும் எத்தனை எத்தனை...
இவர்கள் சாதித்தவற்றுள்
ஒரு அணுவளவேனும்
என்னால் சாதிக்க முடிந்ததா..?
என்ன செய்ய...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சாதனைப் படிக்கட்டில்
ஏறுவதற்காக
ஒரு காலை எடுத்து வைக்கும்போது
மற்றைய காலை இருவர்
இழுத்து விடுகின்றனர்.
இவர்களைக் கடந்து சில படிகள்
கடப்பதற்குள் - வயது
இளமை தொலைந்து போகிறதே...!

என்னைப் போல் நீயும்
இருந்து விடாது
இளமையிலேயே சாதிக்க
முயற்சி செய்.



# எண்ணங்கள்



நேசித்தல் என்றால் என்ன என்று
புரியாத வயதில் காதல்
பரீட்சைக்கு கடிதம், கவிதை
எழுத முடியாது.... ஆனால்
"பின்" கணக்கில் கவிதை கடிதம்
எழுதுகின்றாய்.
இது காதலின் சக்தியா இல்லை
உன் வயதிற்கு மேலான வளர்ச்சியா
முதலில் உன் தேர்வுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிகளால் வளப்படுத்து
பின்பு அது உன்னை வளப்படுத்தும்.

இரவு போன்றது வாழ்க்கை
அதில் கனவு போன்றது காதல்
சிலருக்கு நல்ல கனவு வரும்.
சிலருக்கு கெட்ட கனவுகளும் வரும்.
கனவுகள் கலையாமலே நிறையப்பேர்
சிறப்பாக வாழ்கின்றார்கள்
என்பதனைப் புரிந்துகொள்.

சாதிக்கும் எண்ணங்களை
வளர்த்துக் கொள்.
வாழ்க்கை என்றால் என்ன என்று
புரியாத வயதில்
வாழ்க்கை பற்றிய பயம் ஏன்!
உனக்கு
உன் வயதிற்கு ஏற்ற கருமத்தினை
ஏற்றுக் கொள்.
பின்பு அது உன் வாழ்வினை
வளப்படுத்தும்.



# புதுமை



பெண்பார்க்க வந்தது முதல்
நிச்சயதார்த்தம் தொடங்கி
முதல் இரவு வரும் வரை
எவ்வளவு எதிர்பார்ப்பு இவளுக்கு!

தம்பி குடித்த பாலை
குடிக்கமாட்டாள்.
ஆனால் இன்று தன்னையே...!
கொடுக்க போகின்றாள்!
தன் உணர்வுகள்! ஆசைகள்!
எல்லாவற்றையும் இன்னொருவனுக்குத்
தியாகம் செய்யத் தயாராகின்றாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது எதிர்பார்ப்பு தன்னைப்
புரிந்து கொள்ள வேண்டும்.
தன்னோடு அன்பாகப் பேசவேண்டும்.
தன் விருப்பு வெறுப்புக்களை
அறிந்து கொள்ளவேண்டுமென்பதே!
நடந்ததோ...?

அவனது வேரான புன்னகை...
தீயா...? குளிரா...? என்பதை அந்நேரம்
இவளால் புரிந்துகொள்ள முடியவில்லை.
ஆனால் அவள் நினைத்ததோ - இவனை
அவளது உணர்ச்சிகளின் வடிகாலான
ஒரு இயந்திரமாகவே...!

அவளால் என்ன செய்யமுடியும்.
எமது சமூகத்தின் நிலைமை இதுதானே
கல்வி கற்ற எனக்கே
இந்த நிலைமையென்றால்.....
கற்காத பெண்களின் நிலைமை...?
கல்லூரியில் இப்படி வாழ்வேன்.
அப்படி வாழ்வேன்
என்பது கதைப்பதற்கு
நன்றாய் இருக்கும்.
நிஜத்தில் எல்லாம் வேறு!



# இயற்கை



ஆழமான ஒரு கவிதை
எழுத வேண்டும்
ஆற்றங்கரையில் அமர்ந்திருக்கின்றேன்
சிந்தனையின் சிறகடிப்பிலும்,
தென்றலின் குதூகலிப்பிலும்
மேனி சிலிர்த்திருக்கின்றது
இயற்கையின் படைப்புக்களே
மனித வாழ்க்கைக்குத்தானே
எத்தனை மனித உள்ளங்கள்
இதனை உணர்ந்துள்ளது.
இயற்கையினை விட மிகச் சிறந்த
கவிதைப் புத்தகம் உண்டா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான வெளியினை விட
ஒரு புதுக்கவிதையுண்டா?
ஒவ்வொரு கணமும்
விதம் விதமாக காட்சி தருகின்றதே!
எப்படி இயற்றாய்?
இறைவனது படைப்புக்களே!
ஒரு கவிதைத் தொகுப்புத் தானே!
உள்ளடக்கமும் உருவமும்
தினமும் மாறிக் கொண்டுள்ளதே
எனது நோக்கினிலும்
சில தத்துவம் புரிந்ததையிட்டு
மகிழ்ச்சியுடன் செல்கிறேன்.



# ஆசை



இவ்வுலகில் படைக்கப்பட்ட
ஒவ்வொரு ஜீவனுக்கும்
ஒன்றல்ல பல நிறைவேறாத
ஆசைகள்...
ஏன்! என்று
எனக்குப் புரியவில்லை
என்றாலும் சில ஆசைகள்


தந்தையின் கைகோர்த்து
வீதிகளில் உலாவர ஆசை
அன்னையிடம் கதை கேட்டுக்கொண்டே
உறங்கிவிட ஆசை.

அம்மை பாடசாலை கொண்டு விட
தந்தை அழைத்து வர
அப்போது
வீதிகளில் உள்ளவற்றையெல்லாம்
கேட்டுவர ஆசை.
புதிது புதிதாக
விளையாட்டுப் பொருட்கள்
கொண்டு விளையாட ஆசை.

அன்னையும் தந்தையும் சேர்ந்து
வீட்டுப் பாடம் சொல்லித்தர ஆசை
நான் உறங்கும் வரை அன்னை
உறங்காமல் இருக்க ஆசை
எனக்கு ஒரு குட்டித் தங்கை
இருக்க வேண்டும் என்றொரு ஆசை.



# எண்ணத்தின் சிதைவு




பிரிப்பவரைப்
பார்க்கத் தூண்டுவது
உனது பண்பான நடத்தைகள்
என்றிருந்தேன்.....
அவர்கள் பார்வையிலேயே
இடக்கரைக் கண்டபின்
எனது எண்ணங்களை
மாற்றிக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியல்



நீ உனக்கு மறுபிறவியின் மீது
நம்பிக்கையில்லை.
பிறப்பு. இறப்பு ஒருமுறை
என்பது போல்
இவ்வாழ்க்கையும் ஒரு
முறைதான்.
உனக்கு வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தைப்
பயன்படுத்திக்கொள்.
சாதிப்பதற்கு பணம். சூழ்நிலை:
என்பவனை முதலில் செருப்பில் அடி
அது முதுகெலும்பு இல்லாதவனது
பேச்சு.



எவராலும் சாதிக்க முடியும்.
உன்னால்!
என்னால்!
முயற்சி உள்ளவன் எவனாலும்.....

உன்வாழ்க்கை பிறருக்கு
வழிகாட்டியாகட்டும்.
உன் வாழ்வு பின்
வரலாறாகட்டும்
எழுந்துவா நண்பனே!
பூக்கக் கருகும் மலராக இராதே!

தோமஸ் அல்வா எடிசன் வறுமை
என்றிருந்திருந்தால்
உலகம் இன்று இருளில்.
காந்தி பொருள் என்றிருந்திருந்தால் இன்று
அவர் மகாத்மா இல்லை.
புரிந்துகொள் நண்பனே!

சாதிப்பதற்கு சூழ்நிலை தேவை
என்கின்றாயோ!
உன் எண்ணத்தை எரித்துவிடு
சாக்ரடீஸ் சூழ்நிலை என்றிருந்திருந்தால்
இன்று தத்துவமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமிப்புச் சூழ்நிலை அன்றிருந்திருந்தால்
இன்று! பலவீதிகள் இல்லை
நியூட்டன் ஐன்ஸ்டீன் போலவும்
சூழ்நிலை அன்றிருந்தால்
இன்று! புவியீர்ப்பு விதிகள் இல்லை.

உன் கற்பனைக் குதிரையைத்
தட்டிவிடு
புதிய எல்லைகளை வளர்த்துக்கொள்
காலத்தை உணர்!
நம்மை நீங்கிச் செல்லும் ஒவ்வொரு
நிமிடமும் மீண்டும் கையில் கிட்டாது
உன் வாழ்க்கையின் நாட்கள்
எண்ணப்பட்டுக் கொண்டுள்ளன
விடிகின்ற ஒவ்வொரு பொழுதும்
உனக்காகவே!
வருகிற ஒவ்வொரு இரவும்
உனக்காகவே!
எழுந்துவா நண்பனே!
நாளைய விடியல் நமக்காகவே!



# வெளிச்சம்



பள்ளிச் சாலையின் இறுதி
மணி யோசை
எங்களை நிலைகுலையச்
செய்கின்றது.
எங்கும் மாணவர் மகிழ்ச்சியால்
துள்ளிக் குதிக்கின்றனர்.
எங்கள் வகுப்போ, எங்கும்
சோக ஒலி...!

பாடசாலையில் மாணவராக இருக்கும்
ஒவ்வொரு நிமிடமும்
எண்ணப்பட்டுக் கொண்டுள்ளன.
பரீட்சைக்கான நேரங்கள் எங்களை
நெருங்கிய வண்ணமுள்ளன.
எங்களை மாணவனாக்கி இன்று
மனிதனாக வாழ்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வழிகாட்டிய எங்கள் தெய்வம்
கூறிய இறுதி வார்த்தை
"உங்கள் வாழ்வினை தீர்மானிக்கப்
போகின்ற பரீட்சை இவைதாம்"
இதை எண்ணி
சிந்திப்பதா, சிரிப்பதா புரியவில்லை.

பெறுபேறுகள் வந்தும் பல்கலைக்கழக
அனுமதிக்காக
இரண்டு வருடம் காத்து நிற்க
வேண்டிய நிலை.
மேல்நாடுகளில் 22 வயதில் ஒருவன்
பட்டதாரியாகி விடுகின்றான்.
இங்கோ 22 வயதில்
அனுமதிக்கப்படுகின்றான்.

படிக்க வேண்டிய இரண்டு வருடங்கள்
எங்கோ தொலைந்து போகின்றன.
இதற்கெல்லாம் யார்
காரணம்...?
கல்வியாளர்களா...? ஆட்சியாளர்களா...?
எனக்குப் புரியவில்லை
ஏசியில் இருப்பவர்களுக்கு எங்கள்
வேதனை எங்கே புரியும்



# என்ன மனித வாழ்வு இது...!



இந்த மனிதப் பிறப்பே
வேதனை நிறைந்தது தான்.
இவ்வுலகில் யார்தான் ஆனந்தமாக
வாழ்கின்றார்கள்...!
ஒவ்வொருநாளும் ஒரு குறுகிய வட்டத்துக்குள்
வாழ்ந்து கொண்டு இருக்கும்
வாழ்வு - எனக்குப்
பிடிக்கவில்லை.
குறுகிய சிந்தனைகளுக்குள்
வாழ்வதும் - எனக்குப்
பிடிக்கவில்லை...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வாழ்க்கையென்பதே
ஒரு தங்குமிடம்தானே! அதற்குள்
எத்தனை தங்குமிடங்கள்...
இதையேன் உணர்கின்றார்கள் இல்லை.
ஒரு பறவையாக இருந்திருந்தால்...
வானவெளி சுதந்திரமாகப்
பாடிப்பறந்து கொண்டிருப்பேன்
இத்தனை கால போராட்டங்கள்
இல்லாமல்..!
ஆனந்தமாகக் கழிந்திருக்கும் - என்
வாழ்வு..!
இயற்கையோடு இயற்கையாக
வாழ்ந்து கொண்டிருப்பேன்..!

சிந்திக்கத் தெரிந்த விலங்குகளிடத்தே
சில மனிதநேய உள்ளங்களைப் படைத்தது
இறைவன் தவறா..?
என்ன செய்ய
உறவுகள் மட்டுமா..?
நண்பர்களாலும் ஏமாற்றப்படும்போது
நெஞ்சம் தாங்கமுடியவில்லையே..!
போலியான மனிதர்களையும்
போலியான உறவுகளையும்
விட்டு வெகுதூரம் பறந்து செல்ல
நினைக்கின்றேன்.



சில சந்தர்ப்பங்களில்
சில மனிதர்கள்
வாழ்க்கை வட்டத்திலுள் இருந்து
வெளியே வந்து சிந்தித்தாலும் - மீண்டும்
அதற்குள் அடைபடும் தத்துவமடா
இந்த மனித வாழ்வு..!

யார்தான் இப்படி நடக்குமென
நினைத்தார்கள்...
படைக்கும்போதே இறைவனுக்கு
தெரிந்திருந்தால்...
இறைவன்
இப்படிச் செய்திருக்கமாட்டான்..!
இறைவனே..! - இன்று
ஏமாறுவான் என்று - அவனுக்கு
அன்று தெரிந்திருக்கவில்லை..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அது ஒரு காலம்



அதிகாலைப் பொழுதில்
பூக்கள் சிந்துகின்ற பனியினை
கையினால் தட்டி விடுகின்றேன்.
அப்பப்பா!
எவ்வளவு ஆனந்தமானது
பக்கத்து வீட்டு மஞ்சுவுடன் சேர்ந்து
தும்பி பிடித்தது
எவ்வளவு இனிமையானது.

நண்பர்களுடன் கைகோர்த்துக் கொண்டு
பாடசாலை சென்றதும்,
ஒன்றாக பனம்பழம் சாப்பிட்டதும்,
கள்ள மாங்காய் சாப்பிட்டதும்
அது ஒரு காலம்.



திரும்பி வராத சிறுபிள்ளைக்காலம்.
இப்போது நினைக்கின்றேன்
நான்!
குழந்தையாகவே இருந்திருந்தால்
எனக்கு குழந்தை ஆசை
வந்திருக்காது.


வண்டுகள் மட்டும் தான்
தேன் குடிக்குமா..?
நாங்களும் தான் பூக்கள் பறித்து
தேன் குடித்தோம்.
இப்போதும் என் வீட்டிலுள்ள
பூக்களைப் பார்க்கின்றேன்
மனதில் ஆனந்தம் பொங்குகின்றது
ஆனால்!
அந்த சிறுமைகள் தான்
எங்கோ ஒழிந்து விட்டன.

ஒன்றாக தும்பி பிடித்து
ஒன்றாக பாடசாலை சென்ற அதே
மஞ்சுவிற்கு இன்று
குழந்தை பிறந்துள்ளது
இப்போது நினைக்கின்றேன்
நான்!
குழந்தையாகவே இருந்திருந்தால்
எனக்கு குழந்தை ஆசை
வந்திருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி நிச்சயம்



**சிந்தனைகள்**

முயற்சிகளில் மட்டுமல்ல கனவிலும்
கற்பனையிலும் கூட
நிறைவு பெறும். எப்போதெனில்
சாதனை வெறி - உன்
சிந்தையிலூறிவிட்டால்
"கொக்கியின்" மது போதையில்தான்
அரிய கண்டுபிடிப்பை
கனவில் கண்டான்.

நீ!
நிறைய கனவுகள் காண்.
உறக்கத்தில் கூட விழித்திருக்கின்றாய்.
சாதனைகளிற்காக
எம்மால் முடியாது என்று
தோன்றினாலும் பரவாயில்லை.
எண்ணங்களையாவது உயர்ந்ததாக
வளர்த்துக் கொள்வோம்.



எல்லோராலும்
சாதனையைப் படைக்கட்டும்
ஏன் முடியவில்லையே என
நீ கேட்பது புரிகின்றது.
பலர் தோல்விகளால் துவண்டு
விடுகின்றனர்.
சிலர் முயன்று வெற்றி
பெறுகின்றனர்.
சாதித்தவரின் வரலாற்றைப்புரட்டு
உனக்குப் புரியும்.


சந்தர்ப்பமும் சூழ்நிலையும்
எனக்கு எப்போதும் இடைஞ்சலாகவே
உள்ளது நண்பா!
வெல்வது கடினமானதென்பது
எனக்குத் தெரியும்
ஆனால்
வெல்ல முடியாதென்றில்லை.
நான் தோல்விகளைப் பற்றி
சிந்திப்பதில்லை.

வெற்றி பெற்றமைக்கு
காரணங்களைத்
தேடிக் கொண்டிருக்கின்றேன்
நண்பா!
எனக்கு ஒன்று மட்டும் தெரியும்
நிச்சயம் வெற்றி பெறுவேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்பனே!



நட்பு நிஜமானதா! நிழலானதா!

நிஜம் இருந்தால் தான் நிழல்

பிரதிபலிக்க முடியும்.

பண்பான உள்ளம்

உடையோர் தான்

பண்பான நட்பினைப் பரிமாற முடியும்

நெருங்கத்து அகம் நெகிழும் நண்பனே.



என்னைச் சுற்றியும்

நண்பர்கள் உண்டு.

நான் விழுந்தால் என் மேல்

ஏறி இருப்பவர்களுமுண்டு

என்னைத் தட்டிக் கொடுத்து

என் வாழ்வினை

வளப்படுத்தியவர்களும் உண்டு.

என்னைத் தட்டிக் கொடுத்தவர்களை விட

என்னை மிதித்தவர்களாலேயே

நான் அதிகம் படிக்கிறேன்.

முடிவில்

அவர்கள் தான் என்னுள்

நம்பிக்கைகளையும், வைராக்கியத்தையும்

வளர்த்தவர்கள்

எனக்குக் கிடைத்த நண்பர்கள்

எல்லோருக்கும் கிடைத்தால்

எல்லோரும் சாதனையாளர்களே...!

உன்னால் முடியாது என்றால்

மற்றவரால் முடியாது என்று எண்ணாதே.

உன்னால் முடியாவிட்டால் நண்பனைத்

தட்டிக் கொடு.

அவன் சாதிப்பதை எண்ணி

நீ மகிழ்ச்சி கொள்.

இந்த நட்பிற்கு உலகத்தில்

எதுவுமே ஈடாகாது

நண்பனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் தென்றல்



நீதான் இனிய காதலியே...!
சென்றுவா...!
இதோ பூவாக வாழ்த்துகிறேன்
உன் கணவனுடன் வாழ்வதற்கு.
என் வாழ்வில் ஒரு
தென்றலாக வந்து சென்றவளே...!
எல்லோர் போலவும்
உன் நினைவுகளுடன்
வாழ விருப்பமில்லை
இன்னொரு தென்றல் வராமலா
போய்விடும். என் வாழ்வில்
காத்திருக்கின்றேன்.
அடுத்த தென்றல் வருகைக்காக...!



# இளமை




முடியாததினை முடியும்
என நினைப்பதும்
முடியக் கூடியதினை முடியாது
என நினைப்பதும்
இளமையென்பது அப்படித்தானடா
தத்தித் தாவும் மனதிற்கு
கடிவாளம் ஏதடா...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# (சமூக) இயலாமை



தெருநாய்களுக்குக் கூட
ஒதுங்க இடமுண்டு
எமக்கு எங்கே ஓர் இடம்..?
வேலி ஓரத்தில் இரண்டு
முதிர் கன்னிகளின் பேச்சு...!



# பருவ மாற்றங்கள்



அன்று சின்னதாக இருந்தது
இன்று எவ்வளவு பெரிதாக
வளர்ந்து விட்டது
அவசரமான இந்த உலகில்
எவ்வளவு விரைவான மாற்றங்கள்.
பார்ப்பவரை உணர்த்துகின்றது
உனது அந்தக் கனிகள்
அதன் செழிப்புகள். மீண்டும்
நீரை ஊற்ற வேண்டும் என்ற
கொள்கையினை தாண்டுகிறது.

188656



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையில் இவ்வளவு சுகந்தம்
உண்டா..?
இப்போது உணர்கின்றேன்
குளிர்காலங்களில் உனக்கே
உரித்தான மகிழ்ச்சியுடன்
எவ்வளவு செழிப்பாக உள்ளாய்.
கோடைக் காலங்களில் வாடி
ஆவென்று விறைகின்றாயே!
ஏன் இந்த பருவ மாற்றங்கள்.
இதுதான் காலத்தின் கட்டாயமோ?

உன்னில் ஏறி விளையாடுவதில்
எவ்வளவு ஆனந்தம் எனக்கு.
ஏன்! என் இச்சைகளுக்கு
வளைந்து கொடுக்கின்றாய்
சின்னதில் இருந்து
பழகிய ஞாபகமோ?
அன்று என்னை விட சின்னதாக
இருந்தாய். இன்று
என்னை விட பலமடங்கு
வளர்ந்து விட்டாய் - உன்
கனிகளைச் சுவைக்கின்றேன்.
அப்பாடா
எவ்வளவு இனிமை...!



# அறியாமை



அந்த மழைக்காலங்களில்
என் மீது
பட்டுச் செல்லும் தென்றலும்
முந்தி முத்தாக விழும்
மழைத்துளிகளும்
எவ்வளவு இனிமையானவை.
புயலும், தென்றலும்
என் மீது
பட்டுச் செல்லும் போது
எழும் இசைக்கு ஈடுண்டோ!
இவையெல்லாம் இவ்வளவு சீக்கிரம்
இல்லாமல் போனதிற்கு
யார் பாவி ..! காரணம் சொல்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைக்காலங்களிலும்
வெயிற் காலங்களிலும்
என் மீது
இளைப்பாறியவர்
எத்தனை எத்தனை பேர்
என் காய் கனிகளை
நீ மட்டுமா உண்டாய்?
எத்தனை பறவைகள்
எத்தனை விலங்குகள் உண்டன!
இதை நீயே அறிவாய்!
காய்த்த மரத்திற்குத்தான் கல்லெறிபடும்
அதனையும் பொறுத்துக் கொண்டேன்.
நான் இவ்வாறு நிலையில்
இவளை அழிக்கப் போகிறாய்
பார் மானிடா! காரணம் சொல்?


நான் என்னைப்
பொருட்படுத்தாமல் உனக்கு
பாதுகாப்பு வழங்கினேன்
இன்று
என்னையே எவ்வாறு அழிக்கலாம்
என்று சிந்திக்கிறாய்!
இதற்காக நான் கலங்கவில்லை
உன் அறியாமையினை எண்ணி
வேதனைப்படுகின்றேன்.
இதற்கெல்லாம்
பார் மானிடா! காரணம் சொல்?

அபிவிருத்தி என்றும்
அடுக்கு மாடிகளென்றும் விரைந்து
உன் பேராசையினால் எங்கள்
இனங்களை அழித்தாயே!
புதிய எங்கள் இனங்களை
உற்பத்தியாவது செய்தாயா...?
இதற்கெல்லாம் நாங்களா காரணம்
பருவமழை பொய்த்துப் போனதற்கு
நாங்களா காரணம்...?
இவ்வாறான நிலையில் நான்
இறப்பதற்கு பயப்படவில்லை - உன்
அறியாமையினை எண்ணி
வேதனைப்படுகின்றேன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த தொடுவானம்



தூரத்திலிருந்து
உன்னை நோக்கிய நேரங்களில்
நானும் நீயும் நெருங்கி
விட்டதாகவே உணர்ந்தேன்.
அருகே நெருங்க நெருங்கத்தான்
நமக்கிடையில் இடைவெளியல்ல
இணைவேயில்லையென்பதனை
உணர்ந்தேன்.
அந்த தொடுவானம் போல...!



# ஓ அமெரிக்காவே...!

ஓ அமெரிக்காவே...!
உன் ஏகாதிபத்தியத்தை
நான் வரவேற்கின்றேன்.
நீ ஜனநாயகம் தெரியாதவன்
என்கின்றனர் பலர்.
உன் எதிரான பிரஜைகள் மீது - நீ
கொண்டுள்ள அக்கறை!
இங்கே நிலைமை வேறு
உன்னையா ஜனநாயகம் தெரியாதவன்
என்கின்றனர்.
சிரிப்பதா..? சிந்திப்பதா புரியவில்லை..?

உலகில் உள்ள அனைவரையும்
சர்வதேச நீதி மன்றில் நிறுத்தலாம்
என்கிறாய்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உன் நாட்டு பிரஜைகளை நிறுத்தமுடியாது
என்கிறாய்.
எவ்வளவு அக்கறை உன் பிரஜைகள் மீது
நீயா ஜனநாயகம் தெரியாதவன்.
உன் நாட்டில் இல்லாத வளங்களா
வேறு நாட்டில் உள்ளது..?

இருக்கும் போதே பிற நாடுகளைச் சுரண்டுகின்றாயே
எவ்வளவு அக்கறை
உன் எதிர்காலப் பிரஜைகள் மீது.
நீயா ஜனநாயகம் தெரியாதவன்.

ஓ அமெரிக்காவே உன்னை நான்
நேசிக்கின்றேன்.
உன் பிரஜைகள் மீது நீ கொண்டுள்ள
அக்கறையை நேசிக்கின்றேன்.
அதற்காக ஜனநாயகம் எனக்கூறிக் கொண்டு
பலரை சிரிக்க வைத்தாய் ஈராக்கில்
இன்னும் பலர் உறவையும், உணர்வையும்
பறிகொடுத்து கதறுவதை மறந்துவிட்டாயா!
அல்லது மறைத்துவிட்டாயா!
எனக்குப் புரியவில்லை
உன் ஜனநாயகம்.



# அந்த முழு நிலாக்காலம்....!



சீன தேசத்திலிருந்து
புலம் பெயர்ந்த நான்...
பல வருடங்களுக்குப் பின்...
என் இனிய கிராமம் நோக்கி
மீண்டும் - பயணிக்கின்றேன்...!

வாகன இரைச்சல் கலந்த
காற்றை விட்டு.
ஒரு மண் வாசனையையும்
அறியாத இந்த
வீதிகளை விட்டு
போலியான மனிதர்களை விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு காலம் தான்
வாழ்ந்தாலும் - ஒரு
பிடிப்பினையும் ஏற்படுத்தாத
நகர வாழ்வை விட்டு
என் இனிய கிராமம்
நோக்கிப் பயணிக்கின்றேன்.

நடந்து வந்த பாதையினை
எப்படி மறப்பது?
மறப்பது மனிதப் பண்பாகுமா?
அல்லது அந்த களிக்க
வாழ்வினை மறந்துவிட்டால்
மனம் வாழ்ந்துவிடுமா!
நான் சென்றதும்
தனக்கே உரித்தான
சிரிப்புடன் - என்னை
அரவணைத்துக்கொள்ளுமென
நினைத்துத்தான்...

ஆடி அசையும் பயிர்களும்
கூடிக் கூவும் குயில்களும்
அதிகாலைத் தென்றல் சுமந்துவரும்
அந்தப் பூக்களின்



நறுமணமும்...
மழைக்காலங்களில் மண்
வாசனையும்...
என் கிராமத்தை அழகுபடுத்தியது
உண்மை தான்...!
ஆனால் - அவை
இப்போதில்லை...!
அந்தப் பௌர்ணமி
முழு நிலாக் காலங்களில்
ஜன்னல் ஊடாக வரும்
தென்றல் காற்று - மீண்டும்
கிடைக்குமா?

நாம் கைகளைக் கோர்த்துக்
கொண்டு ஓடித் திரிந்த
அந்த வயல்வெளி...
உன் வீட்டிலிருந்து வரும் - அந்த
ஒற்றையடிப் பாதை மட்டும்
அப்படியே உள்ளது...!
ஆனால் - உன்
வீடுதான் அங்கு இல்லை...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வீட்டு
முற்றத்து வேம்பின் கீழ்
இருந்து அந்தப் பௌர்ணமி
முழு நிலாக் காலங்களில்
நட்சத்திரம் எண்ணி...
இலட்சியம் பரிமாறிக்
கொண்டோமே...!
அந்த முற்றத்து வேம்பும்
இல்லை..!
அந்த பழைய நண்பர்களும்
இல்லை...!
ஏன்..? நீ கூட இப்போது
என் அருகாமையில்
இல்லை..!
ஆனால்...
அன்றிருந்த அந்த
பௌர்ணமி முழு நிலா
மட்டும்... இப்போதும்
என் அருகாமையிலேயே உள்ளது.

அன்று வாழ்க்கை பற்றி
எவ்வளவு கற்பனைகள்
செய்திருப்போம்...!
இன்று எல்லாம் பொய்த்துப்போனதே...!
பொய்யென நினைத்தது
நிஜமாகிவிட்டது...!
நிஜமென நினைத்தது
பொய்யாகி விட்டது...!
என்ன செய்ய
வாழ்வின் தத்துவமே இதுதானே....!



# (ஏ) மனிதா சிந்தி

இறைவன்! உன்னிடம்
பூஜைக்கு பூக்கள் கேட்டான்
என்றால்!
அவன் கேட்டதெல்லாம்
உன் உள்ளத்தை நந்தவனமாக்கி
அதில் வைத்து என்னை
பூஜி என்பதே!
இறைவன் படைப்பில்
உயர்ந்த மனிதா
இதனை ஏன் உணர்கின்றாய் இல்லை?

மலர்களை ஏன் பறித்து
சூடுகின்றாய்...?
அதிலே உனக்கு ஒரு
இன்பமும் இல்லை.
பூ வைத்தால் தான் நீ
அழகு பெறுகின்றாயா..?
அப்போ நீ! அழகில்லையா...?
மலர்தான் அழகென்பதனை
உணர்ந்து கொள்.
இறைவன் படைப்பில்
உயர்ந்த மனிதா
இதனையேன் உணர்கின்றாயில்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் இந்த கண்ணீர்த்துளி...!



பக்கத்து வீட்டு வயல்
பூத்து இருக்கும் செடியினைப்
பார்த்து விட்டுப் பூப்பறிக்க
வந்திருந்தாள்.
அழகுக்காகவே பூத்திருப்பதாக எண்ணி
செடியருகே சென்றாள்.

அந்த சிவந்த ரோஜா
இதழ்கள் மேல் இருந்த
பனித்துளிகள் எனக்கு என்னவோ!
கண்ணீர் சிந்துவதாகவே!
தோன்றியது!



# கனியவில்லை



ஒன்றாகக் கூடிய காலங்கள்
அன்பாகத் திரிந்த காலங்கள்
ஒரு 'Tea' யை பகிர்
குடித்த காலங்கள்.
ஒரு கோப்பையில்
பகல் உணவருந்திய காலங்கள்,
எல்லாம்! எங்கோ தொலைந்து போயின.

செல்லமாக கோ'ளை விடுவதும்.
செல்லமாக கோபப்படுவதும்
பின்பு சிணுங்குவதும்
"A" ஜோக்குக்கள் சொல்லி
சிரிப்பதும் ஒரு காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் வீட்டிற்கு நான்
வருவதும் - என்
வீட்டிற்கு நீ வருவதும்.
ரோட்டோரங்களிலிருந்து
மணிக்கணக்காய் அலட்டுவதும்.
'குளுப் விட்டடி' என்று கூறிவிட்டு
மணிக்கணக்காய் கூத்தடிப்பதும்
ஒரு காலம்.
அப்போதெல்லாம் ஒன்றும் சொல்லாத
இந்த சமூகம் இப்போது!
எங்களை வித்தியாசமாய்ப் பார்க்கின்றது.

படித்து முடித்து விட்டால்
நட்பினை விட்டுவிட வேண்டுமா?
என்ன நியாயம்?
திருமணம் முடித்து விட்டால்
நட்பினைத் துறந்துவிட வேண்டுமா?

ஒன்றாகச் சாப்பிட்டு ஒன்றாகத்
திரிந்த நண்பர்கள் இன்று
தற்செயலாகச் சந்தித்து விட்டால்:
ஒரு புன்னகை.
தெரியாதது போல் ஒரு கேள்வி




நீ? நீங்கள்? தானே!
எப்படி இருக்கின்றாய்.
என்ன செய்கின்றாய்..?
திருமணம் முடித்துவிட்டாயா?
போன்ற பல அடுக்கு விசயங்கள்?
எப்போதும் நிறைவடையாத
எங்கள் சந்திப்புக்கள்.

சிநேகிதி பிரிய மனமின்றி
பிரிகின்றாள்.
நாளும் கல்லூரி வாழ்க்கை ஒன்றை
நினைவுபடுத்தி விட்டு புன்னகைக்கின்றாள்.
எனக்கு ஒரு கவிதையில்
கவி வரிகள் நினைவுக்குவருகின்றன.
கணவர்களிடம் விடை பெற்று
நண்பர்களிடம் வர
இந்த உலகம் இன்னும்
பக்குவமில்லை என்பதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வின் தத்துவம்



[illegible] - நான்
மன்றாடிக் கொண்டிருக்கிறேன்
நான் செய்த பாவங்கள்
இப்போது - என்
கண்முன் தெரிகின்றன...
என் உள்ளுறுப்புக்களில் மாற்றம்
தெரிகின்றது...
இதயத்துடிப்பின் அளவு
குறைந்துவிட்டது...
ஞானை விரைவாக - என்
பழைய வாழ்வினையும்



புதிய வாழ்வினையும் - நோக்கி
அசைபோட்டுக் கொண்டுள்ளது...

வெள்ளைத் துணிக்குள் உடலை
அலைவரி முழம்
கதறி அழவேண்டும் போல்
உள்ளது...
அடுத்தவரை மிதித்து வாழ்வது
எவ்வளவு முட்டாள் தனம்
என்பதை உணர்கின்றேன்...
காலம் கடந்த பின்
சூரிய நமஸ்காரம் எதற்கு...?
பணம் இருந்து என்ன பயன்
மறுவாழ்விற்குரிய புண்ணியத்தை
தேடவில்லையே...
வெற்று உடம்புக்காகவா..
இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள்..
ஆர்ப்பரிப்புக்கள்...

பூலோக வாழ்வென்பது
எமது நீண்டதூர பயணத்தில்
ஒரு ஓய்விடமன்றோ...
இதை எத்தனை மனங்கள்
உணர்ந்துள்ளன...
எம் கணக்கு வழக்குகள்
பார்க்கப்பட்டுக் கொண்டுள்ளன...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நோக்கி யாரோ
எருமையில் வருகின்றார்.
என் ஆத்மா என்னை
விட்டுச் சென்று - என்
உறவுகளைப் பார்த்து
ஏளனமாய புன்னகைக்கின்றது...

மதத்தின் பெயரைச் சொல்லி
வாழ்ந்த எனக்கு...
அப்போது எங்கே புரிந்தது
மதத்தின் தத்துவங்கள்...
நீ செய்த கருமத்தின்
பயனை இப்பிறப்பிலே
உணர்வாய் என்பது
இதைத் தானோ...?



# உனக்காக ஏங்கிய நாட்கள்...!



என்னைவிட இவ்வுலகில்
உன்னை யாரும் அதிகமாக
நேசித்திருக்க முடியாது என்றே
சொல்லுகிறேன்...!
நான் உன்னை
வேறு கண்ணோட்டத்தில்
பார்ப்பதாக உன்
நண்பியிடம் கூறினாயாமே.
உன் நண்பியையே உன்னால்
புரிந்துகொள்ள முடியவில்லை.
எனினும்...
புரிந்து கொள்ளப்போகிறாய்.
பரவாயில்லை...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ நினைப்பது போல்
எனது உணர்ச்சிகளின்
வடிகால்களாக உன்னை
நினைக்கவில்லை.
குழந்தைத்தனமான சிரிப்பு
சிறுபிள்ளைத்தனமான குறும்புகள்
எத்தனையோ. ஏதோ
எனக்காகவே உன்னை
பிரமன் படைத்தான் என்று
சொல்லுகிறேன்...

கோடைக்காலங்களில்
மழைத்துளியைக் கண்ட
மரம்போல் மகிழ்ச்சியடைகின்றேன்.
உன் நினைவுகளைப்பற்றி
நினைக்கும்போது
என் வாழ்வில் பாதியாக
நீ அமைந்தால்
எவ்வளவு மகிழ்ச்சியடைவேன்.
ஒரு விதத்தில் நானும்
அதிஷ்டக்காரன் தான்..!

உனக்கு எங்கே புரியும்
எனது எண்ணங்கள்.
உன் நண்பியையே உன்னால்
புரிந்து கொள்ள முடியாத போது



# கை கோர்ப்போம் வாராயோ...!

உணர்வுகளின் பாதிப்பு
உனக்குப் புரியுமா..?
வாழ்வின் மேடு பள்ளங்களை
கடந்திருக்கின்றாயா..?
சோதனைகளையும், வேதனைகளையும்
நீ - உணர்ந்திருக்கின்றாயா..?
இல்லை:
நீ - உணரவில்லை..
வாழ்வில் பாதிக்கப்பட்டவருக்குத்தான்
வேதனை புரியும்.
எதிலுமே பாதிக்கப்படாத நீ
மனித உரிமைகளைப் பற்றித்தான்
கதைத்துக் கொண்டிருப்பாய்.

World Vision Lanka
22 3rd Cross Street
Jaffna
Sri Lanka




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை மதிக்க வேண்டுமென
போதித்துக் கொண்டிருப்பாய்.
ஆனால் - நீ
துஷ்பிரயோகம் செய்துகொண்டிருப்பாய்.

இனக்கலவரத்தைத் தூண்டிவிட்டு
குளிர் காய்பவர்களுக்கு மத்தியில்
நீ - என்ன தான் செய்யமுடியும்..?
அரசியல் சொல்லாக்கினால்
நாளும் பெரும் இனக்கலவரத்தில்
நீ - பாதிக்கப்பட்டதுண்டா..?
அவசரகால சட்டத்திலாவது
பாதிக்கப்பட்டதுண்டா..?
தடுப்பு முகாமிலாவது - உன்
சகோதரன் பாதிக்கப்பட்டதுண்டா..?
அல்லது
வழிவழி உடைமைகளையும்.
உறவுகளையும் இழந்து
அலைக்கழிக்கப்பட்டிருக்கின்றாயா..?
இல்லை..
இதில் எதிலும் - நீ
பாதிக்கப்படவில்லை..
ஏனெனில்
மனித உரிமைகளைப்பற்றிக்
கதைத்து வாழ்பவன் தானே.



# ரீக்கடையில் இரண்டு தேனீர்க் கோப்பைகள்...!



நீரின் தினம்
அழுக்கடைந்தனையே
விரும்புகின்றேன்..
ஏனெனில்
காவப்படும் நோய்களிலாவது
உன்னை முந்தவிட்டுக்
கொள்ளலாமல்லவா..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்கள் மட்டுமல்ல, உணர்வுகளும் தான்...!

உரிமைப் போராட்டத்திற்கு

எதிரான - அரச


ஒடுக்குமுறையென்பது

உயிர்களை மட்டுமல்ல

உணர்வுகளையும்

கொன்றுவிட்டதடா...!

# வாழ்வுச்சுழி



எங்கள் முற்றத்து வேம்பின்

உச்சியில் அந்த குருவி

ஆனந்தமாக கூடு கட்டியது

எல்லையற்ற துன்பங்களுக்கு

மத்தியில் புல்லொன்று

குச்சியாக எடுத்துச் சென்று

கட்டியது

துன்பம் தான்

பொறுத்துக் கொண்டது

தன் உறவினையும் சந்ததியினையும்

வளர்ப்பதில் ஒரு சந்தோஷம் தான்

அதற்கு அப்போது புரியவில்லை

இறகுகள் முளைத்தவுடன்

தன்னை விட்டு பறந்துவிடுமென்று.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


நாளும் கூடுகட்டினேன்
குச்சிக்கு பதிலாக உறவுகளைக்
கொண்டு கட்டினேன்
ஒவ்வொரு உறவாகச் சேர்த்தேன்
எனது இலட்சியங்கள்
சந்தோஷங்கள் எல்லாம் மறந்து
பாடுபட்டேன்.
எனக்கு அப்போது புரியவில்லை
தேவைகள் தீர்ந்தவுடன்
என்னைவிட்டு பிரிந்து விடுமென்று

இப்போது என் முற்றத்து
வேம்பின் உச்சியில்
அந்தக் குருவி மட்டுமே
கீச்... கீச்.....

அது என்னைப் பார்த்து
பரிதாபப்படுகின்றதா இல்லை
என்னைப் போலவே - நீ
ஏன்று ஏளனமாக
புன்னகைக்கின்றதா?



# கசங்கிய மனம்...!




நீதியாக விரிக்கப்பட்ட
மெத்தை விரிப்புக்கள்...
அதிகாலையில் கசங்கியே
கிடக்கின்றன...
என் மனதைப் போல்...
அவை கசங்கலில் இருந்து
விடுபட்டு விடும்
என் மனது...



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காலம் மாறிப் போச்சு...!



நீண்ட நாள்

இடைவெளியின் பின்

நண்பியின் வீட்டுக்குச்

சென்றேன்.

நண்பி எங்கே என்றேன்..?

அவள் மாதர் சங்கக்

கூட்டத்திற்குச் சென்று

விட்டாளாம்.

நண்பியின் துணி துவைக்கும்

அவளது கணவனின் பதில்..



# ஒரு நாள் உணர்வாய்...!

ஒரு துளி கண்ணீர்

சிந்துவதற்காகக் கலங்குகிறாய்

எங்கள் இனம்...

தினந்தோறும் இரத்தம்

சிந்துகிறதே...

இதை என்றாவது ஒருநாள்

எண்ணியதுண்டா....

மானிடா..?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை



[illegible]

பாதுகாப்புப் பற்றி

மரம் வெட்டும்

கோடரிப் பிடிகளின்

மாநாடு...



# நண்பனுக்கு சில வரிகள்...

என் இறப்பைப் பற்றியே
கதைக்கின்றாய் நண்பனே!
எப்படியும் நாம் இறந்து விடுவோம்
அல்லது இறக்கடிக்கப்படுவோம்
ஏன் அதற்குள் அவசரப்படுகின்றாய்!
நாம் இறப்பதற்குள் ஏதும்
செய்யமுடியுமா...?
சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்...!

நமக்கிடையில் எவ்வளவு
கருத்தொற்றுமைகள் - ஏன்
இதில் மட்டும் இல்லாமல் போனது
ஏன் இவ்வளவு வெறுப்பு
உலக வாழ்க்கையில் - ஒருவேளை
உனது உணர்வுகள், உரிமைகள்
இங்கு மறுக்கப்படுகின்றதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்கடந்த காலங்களை
எண்ணிப்பார்.
அந்தக் குளக்கரையோரம்
இலுப்பையைத் தழுவி வரும்
தென்றலை ரசித்தோமே.
இவைகளெல்லாம் எம்மனதில் - இன்னும்
பசுமையாய்...

அன்று நமக்கிடையில் பாடங்கள்
பற்றிய கருத்துவேற்றுமைகள்
இன்று இறப்பைப்பற்றியும்
வாழ்க்கையைப்பற்றியும்
மாறிக்கொண்டுள்ளது...!
இதில் தெரிகிறதா நண்பனே
வயதிற்கேற்பதானே மாற்றங்கள்
நிகழும்.

அன்று நீ கூறினாய்
வேதனையில்தான் தத்துவம்
பிறக்கின்றது என்று
உண்மைதான் நண்பா...!



# விழித்திரு...!

இனிய பல்கலைக்கழக நண்பனுக்கு.
நாளை மலரும் தேசத்திற்கு
நாளும் ஒரு தூண்
என்ற நம்பிக்கையில்
வரைகிறேன்.

என் விழிமூடி பல இரவுகள்
கழிந்துவிட்டன.
சிலவேளைகளில் உறக்கம்
என்னைத்தழுவினாலும் - என்
சிந்தை விழித்திருக்கின்றது.

நண்பனே நீ
விழித்திரு கற்பதற்காய்
ஏனெனில்
நாளை மலரும் தேசத்திற்கு
உன் சேவை தேவைப்படும்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வலை

ஏன் இந்தப் போராட்டம்?
எதற்கு இந்தப் போராட்டம்?
விடை தேடுகின்றேன்.
உரிமைகள் மறுக்கப்படும்போது தானே
வன்முறைகள் வெடிக்கின்றன.
உரிமைகள் மறுக்கப்பட்டது தவறா?
இல்லை
மறுக்கப்பட்ட உரிமைக்காக
போராடியது தவறா?
சிந்திக்க தூண்டுகிறதல்லவா
உணர்வு.

யார் தோற்றார்கள்?
யார் வென்றார்கள்?
யார் இறந்தார்கள்?
யார் மீண்டார்கள்?
என்னவை இழப்புக்கள்?
உங்கள் இழப்புக்களை மாறி
மாறி கூறுகின்றீர்கள்.
எங்கள் இழப்புக்களை யாரிடம்
கூறுவது.



இறந்த உறவுகள்
மீண்டு வருமா
இறந்த இளமைதான்
மீண்டும் வருமா?
வாழ்வில் ஒருமுறை பூக்கும்
இந்த இளமைப் பூவின்
நறுமணத்தினை நுகர முடியாமல்
போய்விட்டதே!
பள்ளிப்பருவத்தினைப் பூர்த்தி
செய்யாமலே என் இளமை
தொலைந்துவிட்டதே!



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோலங்கள்

உணர்வுகளில்
தெறிப்புக்களும், விழிப்புக்களும்
மனித வாழ்வின்
கோலங்கள் தான்.


வாழ்வில தென்றல் வந்து
போகவில்லை என்பதற்காக
புயலில் சிக்கி
சின்னாபின்னமாகி விடாதே!

பூக்கள் புயல் காற்றில்
தாக்குப் பிடிக்கும்
தென்றல் காற்றில்
உதிர்ந்துபோவதும் உண்டு

உன் வாழ்க்கைப் பயணத்தில்
ஒவ்வொரு கணத்திலும்
பாதைகள் மாறலாம்.
எதற்கும் விழித்திரு



# செவ்விளனி



அன்றைய - என்
பொழுதுகள் ஆனந்தமாக
என் உறவுகளுடன்
தென்றல் காற்றை
நுகர்ந்தேன்.

தென்றல் காற்றில்
அசைந்தை தாலாட்டிய
சுகத்திற்கு ஈடுண்டோ ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்ய?
என் எஜமான் பாதியிலேயே
என் வாழ்வுக்கு
சாவுமணி அடித்துவிட்டான்.
இராமநாதனே!
விரும்பாமலே எனது வாழ்வு
நிறைவு பெறுகின்றது.

தாயிடமிருந்து
பிரிக்கப்பட்ட நான்
விற்பனைக்காரனிடம்
சில நாள்.
இன்று உன் வீட்டில்.
எப்போது என்னைக் கொன்று
உன் தாகத்தைத்
தீர்த்துக்கொள்வாய்.

என்ன செய்ய
இன்றைய இளைய
ஜனநாயகத்தில்
ஒருவனைக் கொன்றால்
தானே இன்னொருவன்
உயிர்வாழ முடிகின்றது.



# சாரலின் வேதனை

அவள் கண்களில் தெரியும்
அந்த ஏக்கம்
வேதனை உணர்த்துகின்றது.
12 வயதில் - ஒரு
வாசிப்பல் செய்யவேண்டிய
வேலைகளைச் செய்கின்றாள்.

அவளது கைகளைத்
தடவிப் பார்க்கின்றேன்.
மரத்துப்போய் இருக்கின்றது.
என் கண்களில் நீர்
கசிந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை அவனைப் பற்றி
விசாரித்தேன்.
ஐந்தாம் ஆண்டுவரை
கற்றானாம்.
படிக்க ஆசை.
என்ன செய்ய..

தாயும், தந்தையும்
பாலகனை வேலைப்படுத்துகின்றார்கள்.
தம் பிள்ளைகளை அவர்களால்
வேலைப்படுத்த முடியவில்லை.
ஏன் அவர்கள் சிந்திக்கவில்லை..?
சிந்தித்து என்ன பள்ளியை
விட்டு விட்டார்களா...

மலைச்சாரல்களில்
மரங்கள் யாவும் மனம்
விட்டுச் சிரித்திட
பனிச்சாரல் வெளியைச்
சிலிர்த்திடச் செய்ய.
கண்கள் மட்டுமல்ல.
மனதையும் குளிரச் செய்யும்
அழகு - ஆனால்
அங்கு பிரஜைகளின்
வாழ்க்கை அழகல்ல.
அவர்கள் துன்பத்தில்
துடிக்கின்றனர்.
வாழ்வுக்கு வழி தெரியாமல்
தவிக்கின்றனர்.

188856



உன்னைக் கொன்று வீட்டில்
விட்டுவிடவா..?
உன்னான வேலைக்காரர்களுக்கு
சட்டப்படி குற்றமென்றேன்.
வேண்டாம் அண்ணா'
இதை சொல்ல அவன்
மனம் பயப்பிட்டது - அவன்
மீண்டும் குழந்தைச் சிரிப்போடு
ஓடி மறைகின்றான்.
எனக்கு ஒரு பெருமூச்சு
மட்டுமே விட முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர் குறிப்பு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பேச்சு மாத்திரம்" ஒருவரை
தமிழராக்காது என்ற நிலைமை
வந்து விட்டது.



தமிழ் இளைஞர்கள் தமது
ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தத்
துடிக்கின்றனர்.
இந்த துடிப்பும், தமிழ்க் கவிதையின்
வெளிப்பாட்டில் முன்
எந்த காலத்திலும் இல்லாத
ஒரு மிகப் பெரிய பரப்பு வெளியை
தோற்றுவித்துள்ளது.

சுதாகர் தமிழ்க் கவிதை வெளிப்பாடு
பற்றிய இந்த வரலாற்றின்
ஒரு வெளிப்பாடு,
ஓர் எடுத்துக்காட்டு.

சுதாகருக்கு தமிழ்
வேறு வகையாகப் பயன்படுகின்றது.
சுகம் தரும் எண்ணத் தடவுதல்களில்
அவர்காணும் இன்பம் தெரிகின்றது.
ஆனால் அந்த நினைவு மீட்புக்களின்
ஊடே நாம்பட்ட துன்பங்களின்
கூக்குரலும் இழந்து போனவற்றின்
சோகங்களும் சுற்றிச்சுற்றி வருகின்றன.
விடலைப் பருவத்துக்
காதலும் தெரிகின்றது.
வீடிழந்த சோகமும் தெரிகின்றது.
சுதாகருக்கு என் வாழ்த்துக்கள்.

அன்புடன்
**கார்த்திகேசு சிவத்தம்பி**
தகைசார் ஓய்வுநிலைப்
பேராசிரியர்.

ISBN 955-98993-0-9

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org